REGD. No. M. 6311

PHONE No. 65630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 252

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: பங்குனீ 23உ திங்கள் (5—4—54) ★ ★ ★ வெளியூர்: பங்குனீ 24உ செவ்வாய் (6—4—54)

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

புதிய அமைச்சர் குழுவிற்கு தி. மு. க. பொதுச்செயலாளர் முன்னறிவிப்பு

—(:)—

'புதுக் கல்வித் திட்டத்தை ஒழித்துக் கட்டுக!'

—(:)—

'தூத்துக்குடி, கல்லக்குடி வழக்குகளை வாபஸ் பெறுக!'

—o—

திராவிட நாடு திராவிடருக்கானால் மக்களின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, உறையுள் மூன்றையும் அளிப்பதுதான் தி. மு. க. குறிக்கோள்

—(0)—

'ஆரியர் — திராவிடர் வேற்றுமை அர்த்தமற்றதல்ல!'

சர். சி. பி.-யின் 'எதேச்சாதிகார முறை'க்கு அண்ணாவின் அறிவுரை

சென்னை, ஏப். 5—

"ஆச்சாரியார் ஆட்சி, மக்கள் விருப்பத்தை மதிக்காத ஆட்சி என்ற தீர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது. வருகின்ற புதிய அமைச்சர் குழுவினரேனும் — ஜனநாயகத்தை மதிப்பவர்களானால்—முதல் வேலையாகப் புதுக் கல்வித் திட்டத்தை வாபஸ் பெறவேண்டும்."

"ஆச்சாரியார் ஆட்சியில், அவரது இதயமற்ற போக்கால் விளைந்துள்ள கொடுமைகளையும் துடைக்க வேண்டுமானால், தூத்துக்குடி, கல்லக்குடி வழக்குகளை உடனடியாக வாபஸ் பெறவேண்டும். நீதி நியாயத்தின் பேரால, அறத்திற்காக, புதிய மந்திரி சபை அந்த வழக்குகளை வாபஸ் பெற வேண்டுமென்று, திராவிட இயக்கத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்."

"'திராவிட நாடு திராவிடருக்கானால், தங்களது வாழ்க்கைத் துன்பங்கள் ஒழியுமா?' என்று ஆவலோடு கேட்கின்றனர், மக்கள். திராவிட முன்னேற்றக் கழகம், மக்கள் துன்பத்தை மாற்றுவதற்காகத்தான் திராவிட நாடு உரிமை பெற வேண்டும் என்று முழங்குகிறது. திராவிட நாடு விடுதலை பெற்றதும், மக்கள் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத உணவு, உடை, உறையுள் என்ற மூன்றையும் அரசாங்கம் அளிக்கும்—அளிக்க வேண்டும் என்பதுதான் தி. மு. கழகத்தின் குறிக்கோள்,"

என்று, 4—4—54 மாலை 6 மணிக்கு ஓட்டேரி, தி. மு. கழகச் சார்பில், தூத்துக்குடி வழக்கு நிதி அளிப்புப் பொதுக்கூட்டம் நடைபெற்றபோது, இருபதுனாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கூடியிருந்த அந்தக் கூட்டத்தில், நன்றி தெரிவித்துப் பேசுகையில், தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டுவிட்டு, மேலும் கூறியதாவது:—

"'ஆரியர்-திராவிடர் வேற்றுமை அர்த்தமற்றது' என்று, அண்ணாமலைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் சர். சி. பி. இராமசாமி அய்யர், அங்கு மாணவர்களிடையே பேசி இருப்பது, வரலாற்று உண்மையை மறைப்பது மட்டுமன்றி, மாணவர்களிடையே வேறு அரசியல் கொள்கையுடையவர்கள் பேசுவதற்கே இடமின்றித் தடை செய்துவிட்டு, தான் மட்டும் 'அரசியல் பிரச்சாரம் செய்யும்' எதேச்சாதிகார முறையுமாகும்," என்றார்.

(முழு விபரம் நாளை வெளிவரும்)

பம்பாய் காங்கிரஸ் தலைவர்மீது புகார்!

பம்பாய், ஏப். 5—

பம்பாய் பிரதேச காங்கிரஸ் தலைவர் பட்டீல், அண்மையில் நடந்த கார்ப்பொரேஷன் தேர்தலில், முஸ்லிம்களைக் கொண்ட, 4—வது கட்சியுடன் ஒப்பந்தம் செய்து கொண்டது காங்கிரஸ் கொள்கைகளைக் காற்றில் பறக்க விட்டதாகும் என்று குற்றங் கூறி நகராட்சி மன்ற காங்கிரஸ் கட்சி உறுப்பினர் நால்வர், காங்கிரஸ் கட்சியைக் கைகழுவியுள்ளனர்.

புதுடில்லி, ஏப்ரல் 5—

இந்திய ரயில் மார்க்கங்களில் சென்ற ஒவ்வொரு ரயில் வண்டியும், 1948—49ல் சராசரி 414 பிரயாணிகளையும், 1950 51ல் 404 பிரயாணிகளையும், 1952—53ல் 330 பிரயாணிகளையும் ஏற்றிச் சென்றிருக்கிறது — அதாவது, 1953 மார்ச் மாதத்துடன் முடிந்த ஐந்து ஆண்டு காலத்தில் பிரயாணி நெருக்கடி நிலைமை சுமார் 20 சதவிகிதம் சீர்பட்டிருக்கிறது எனக் கூறலாம்.

ஊழியர்களிடையே தீய சக்தி!

களைந்தெறிய முயற்சி

காட்மாண்டு, ஏப் 4—

நேபாள சர்க்கார் ஊழியர்களிடையே தீய சக்திகளை களைந்தெறிந்து, தூய்மையை ஏற்படுத்த ஊழியர்கள் அனைவரும் ஒரு சோதனைக் கமிட்டி முன் ஆஜராகும்படி உத்திரவிடப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

திருச்சி என். சங்கரன் மறைவு

★

திருச்சி, ஏப் 5—

திருச்சி நகர சபை உறுப்பினரும், திராவிட முன்னேற்றக் கழக ஆதரவாளருமான தோழர் என். சங்கரன் அவர்கள் இரண்டு நாட்கள் உடல் நலக் குறைவாக இருந்து திடீரென்று—ஞாயிறு (4—4—54) பகல் 12-மணிக்கு இயற்கை எய்தினர் என்பதை மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

தோழர் சங்கரன் அவர்கள் சுயமரியாதை இயக்கம் தோன்றிய காலம் முதலாக—முற்போக்குக் கொள்கைகளில் ஆர்வத்தோடு ஈடுபட்டு இருந்து பணியாற்றி வந்தவர். அவர் பார்ப்பனரல்லாதார் இயக்கத்திலும், திராவிடர் கழகத்திலும் நம்மோடு கலந்து தொண்டாற்றி வந்தவர். திராவிட முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்ட காலத்தில், திருச்சி மாவட்டக் கழகச் செயலாளராகவும், தி மு கழக முதல் மாநாட்டை, மாநில மாநாடு போல் மிகச் சிறப்பாக நடத்தி வைத்த வரவேற்புக் கழகத் தலைவராகவும் இருந்தார். அம்மாவட்டத்தில் பொதுவாகத் திராவிடர் இயக்கமும், சிறப்பாக நமது கழகமும் வளரத் துணை நின்றவர். அவரது அருமைத் தம்பி சாம்பு அவர்களை இயக்கப் பணிக்கென்றே அனுப்பி வைத்து மகிழ்ந்தவர். நமது இயக்கத் தோழர்கள் பலரும் திருச்சிக்குச் சென்றால், அவரது இல்லத்தில் தங்குவதே வழக்கம். வருகின்ற தோழர்களுக்கு உறையுள் வழங்கி, விருந்தளித்து, இனிது பேசி மகிழச் செய்வது, அவர்களது குடும்பக் கடமையாக இருந்தது. அப்படிப்பட்ட நண்பரைத்தான் நாம் திடீரென்று, எதிர்பாராது இழந்துவிட்டோம்.

இயற்கையின், செயலைச் சற்றும் இட்டு அறியவோ இயலவில்லை. எதிர்பாராத இடிகள் அடுத்தடுத்து தாக்குகின்றன! என் செய்வோம்! கடமையைக் கருதியே ஆறுதல் பெறுகிறோம்!

அருமைத் தலைவரை இழந்த அவரது துணைவியாரும், செல்லக் குழந்தைகளும், தமையனை இழந்த தம்பியார் சாம்பு அவர்களும், எத்துணை வேதனை அடைவர் என்பதை எண்ணவும் இயலவில்லை.

தலைவரை இழந்து தவிக்கும் அக்குடும்பத்தார் அனைவருக்கும், குறிப்பாக சாம்பு அவர்கட்கும், நமது ஆழ்ந்த வருத்தத்தையும், ஆறுதல் பெற வேண்டும் என்ற விழைவையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

திருச்சி நகர மக்கட்கும், சிறப்பாக இயக்கத் தோழர்கட்கும், நமது வருத்தத்தை அறிவித்துக் கொள்கிறோம்.

ஆச்சாரியாரின் 'அகந்தை'யும் — பி. டி. இராசனின் 'பெருந்தன்மை'யும்!

மதுரை, ஏப்ரல் 2—

"திரு. இராசகோபாலாச்சாரியார் ஒரு பெரும் நிர்வாகி; உறுதி, ஒழுங்கு, நிலைத்த கொள்கை, ஆகியவற்றின் சின்னம்; எவரையும் ஒவ்வொருவரையும் ஆராய்ந்து பார்க்கக்கூடிய, அளவை நூல் பயிற்சியோடு பொருந்திய அறிவுடையவர்; ஆனால், கெடுதலையான வாய்ப்புக் காரணமாக, மக்கள் ஆட்சி தத்துவத்திற்கு, பெரும்பாலோர் விருப்பத்திற்கு அவரது மனத்தில் இடமில்லாமல் போய்விட்டது; ஆச்சாரியார் பெரும் நிர்வாகி என்றபோதிலும், அரசியல்வாதிக்குரிய திறமை பெற்றவரல்ல; தொண்டர்களைத் தட்டிக் கொடுத்து அணைத்துக்கொள்ளவோ, இரக்கங் கொண்டு மற்றவர்களது குறைகளை உணரவோ அவரால் முடியாது; ஆச்சாரியார்—சென்னை முதல மந்திரி பதவியினின்றும் விலகுவது, நம் அரசியலில் ஒரு சகாப்த முடிவை குறிக்கிறது. அதை ஒரு சோக நாடகமென்றே கூறலாம்."

"திரு. காமராஜ் அவர்களோ, சந்தர்ப்பத்துக்குத் தக்கபடி நடந்துகொள்ளும் அறிவும், ஆற்றலும் படைத்த ஒரு திறமையான அரசியல்வாதி; அவர் தனது வரையறை அறிந்து, விட்டுக் கொடுப்பதன் 'சூட்சமம்' அறிந்து, வெற்றி பெறுகிறார்"

இவ்வாறு, திரு பி டி. ராசன், மதுரை, பல தொழிற் பயிற்சிக் கல்லூரி, மாணவர் சங்க ஆண்டு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 5—4—54 திங்கள்

அச்சமூட்டல்!

உலகம் இரு அணியாகப் பிரிந்து கிடக்கிறது. ஒரு அணிக்கு சோவியத் ரஷ்யா தலைமைத் தாங்குகிறது; மற்றொன்றை அமெரிக்கா ஆதரித்து நிற்கிறது.

இரண்டும் வெவ்வேறு அடிப்படையைக் கொண்டு இயங்குகின்றன. இரண்டு சித்தாந்தங்களிலும், குறையும் உண்டு; நிறையும் உண்டு. அது பற்றிய விளக்கம் இப்பொழுது தேவை இல்லை.

ஒருவரைக் காண ஒருவருக்கு அச்சம்; ஒருவர் மீது ஒருவருக்கு அசூயை; ஒருவர் போக்கில் ஒருவருக்கு அவநம்பிக்கை.

ஒரு சிக்கலைக் களையக் கலந்து பேசுவதாகக் கூறி, புதிய சிக்கலுக்கு வித்திடப்படுகிறது. களங் காணாத சொல்லாடல் போராகவே, இவர்கள் மாநாடுகள் இருந்து வருகின்றன மாநாடுகளில் ஒவ்வொருவர் சார்பிலும் கூறப்பட்ட கருத்துக்களை, உலக மக்களின் அனுதாபம் தங்களுக்குச் சாதகமாக உருவெடுக்க, இருசாராரும் பயன்படுத்தி வெற்றி காண்பதில் விரைகின்றனர். இப்படி கூடிக் குழப்பத்தை மேலும் குழப்படிப்பதற்கு, அரசியல் தந்திரம் என்று பெயராம்!

இந்த இரு அணியின் நாயகர்களின், சொல்லாடல் போட்டிப் பந்தயத்தில், இதுவரை வெற்றி பெற்றுள்ளது யார்? வரையறுத்துக் கூறுவது கடினம். கோடிட்டுக் காட்டுவதும் இயலாது. அந்தந்தச் சார்பினர், தங்கள் பற்றுதலுக்குரியவர், முழு வெற்றி பெற்றதாக முரசம் அறிவிக்கின்றனர்.

பொதுமக்களோ, வெற்றி எது—யாருக்கு வெற்றி என விழிக்கின்றனர். சிக்கல் பட்டியல்—கருத்து முரண் எண்ணிக்கை—தினம் தினம் பெருகி வருவதை மட்டும் பொது மக்களால் புரிந்துகொள்ள முடிகிறது.

கருத்து வேற்றுமையைக் களைய, மன பேதத்திற்குப் பரிகாரம் காண, பிளவைப் போக்க, மனித இருதயத்தால் தான் முடியும் என்பதை இருசாராரும் ஏற்க மறுக்கின்றனர் இருசாராரும் சிங்கம் சிறுத்தையாக மாறுவதைத்தான் விரும்புகின்றனர்—வரவேற்பதில் தீவிரம் காட்டுகின்றனர்.

அறிவு வளர்ச்சி அணுகுண்டைத் தோற்றுவித்தது. அதனினும் கூடிய அறிவாராய்ச்சியின் பரிசாக ஜலவாயு குண்டு உருவாகி இருக்கிறது.

சென்ற உலகப் பெரும்போரின் இறுதியில், அணுகுண்டை ஜப்பான் நகரங்களான நாகசாகி மீதும், இரோஷிமா மீதும் போட்டு அமெரிக்கா பரீட்சை செய்து பார்த்தது பரிதாபத்துக்குரிய ஜப்பான் மக்கள் சித்திரவதைக்குள்ளாயினர். அது ஒரு பெருஞ்சோகக் கதையாகப் போய்விட்டது.

அணுகுண்டு, அமெரிக்காவின் ஏகபோகமாக இருக்கவில்லை. சோவியத் நாடும் அணுகுண்டை உருவாக்கி விட்டது. எனவே, ஒன்றையொன்று அச்சுறுத்தி, அவநம்பிக்கையை வளர்த்து, செல்வாக்கைக் காத்துக் கொள்ளுவதற்கு வேறு வன்மை மிக்க அழிவுப் பொருளைத் தேட வேண்டிய கட்டாயம் இரண்டு நாட்டிற்கும் ஏற்பட்டது.

அணுகுண்டுக்கு அப்பனான ஜலவாயு குண்டு உருவாகிவிட்டது என சோவியத் விளம்பரப்படுத்தியது. அந்த ஆற்றலையும் தான் பெற வேண்டும் என்று பாடுபட்டு, அமெரிக்காவும் அந்த அற்புத ஆற்றலை அடைந்துவிட்டது.

ஜலவாயு குண்டின் அழிவாற்றலை சோவியத் நாடும் பரீட்சார்த்தமாக வெடித்துப் பார்த்திருக்கிறது. என்னென்ன விபரீத பலன் ஏற்பட்டதோ, வேதனை தரும் விளைவுகள் எவை எவையோ, அவை எதையும் அறிவதற்கான வாய்ப்பு உலகிற்குக் கிடைக்காமலே போய்விட்டது.

இதோ, அமெரிக்கா ஜலவாயு குண்டுகளைப் பரீட்சிக்கத் தொடங்கியது. முதலில் வெடித்துப் பரீட்சித்தது அந்த இனத்தில் சிறியதுதானாம்—இருந்தாலும் தனக்குத்தானே, அது பெரிதாம!

1952-ல் முதல் முதலாகப் பரீட்சிக்கப்பட்ட குண்டு ஒரு மைல் நீளமுள்ள சிறு தீவையே இருந்தவிடம் தெரியாமல் விழுங்கிவிட்டதாம். கடலிலேயே பெருங் குழி தோண்டிவிட்டதாம்.

இப்பொழுது வெடிக்கப்பட்ட குண்டோ, அதனினும் பயங்கர விளைவுகளைக் கொடுத்திருக்கின்றன. வெடித்த குண்டிலிருந்து விண்ணில் மிதந்த சாம்பல்கூட, தீப்புண்களை உண்டாக்கவும், கண்களைக் குருடாக்கவும், ஆற்றல் கொண்டுள்ளதாம். அந்த நீரிலே பிடித்த மீன்கூட, ஜலவாயு குண்டு வெடிப்பின் காரணமாக, அருகில் நிற்பவர்களை ஆபத்துக்கு உள்ளாக்குகிறதாம். உலகுக்குத் தரப்பட்டச் சம்பவங்களே, இவ்வளவு பயங்கரத்தைத் தாங்கிக்கொண்டு இருக்கின்ற தென்றால், இருட்டடிக்கப்பட்ட செய்திகளில், இன்னும் சொல்லாமல் சொல்லும் நச்சுச் சம்பவங்கள், என்னென்ன உள்ளனவோ யார் கண்டார்கள்?

1952 நவ. பரீ பரீட்சிக்கப்பட்ட ஜலவாயு குண்டு பற்றி இப்பொழுது பட விளக்கப்பட்டுள்ளது. விண்ணில் பெரும் புகை மேகத்தை உண்டாக்கிற்றும். அதற்கு முன்னை வெடிக்கப்பட்ட 40 அணுகுண்டுகள் தோற்றுவித்த நெருப்புருண்டையைவிட பெரிதாகக் காட்சி தந்ததாம். அப்பெரும் நெருப்புப் பந்தின் சுற்றளவு கிட்டத்தட்ட மூன்றே முக்கால் மைல் இருக்குமாம். அதிலிருந்து தோன்றிய புகை மேகம், 40,000 அடி உயரத்தில் விண்ணில் தோன்றி, பத்து மைல் படர்ந்து, 100 மைல் சுற்றளவிற்குப் பரவலாகக் காட்சி அளித்ததாம்!

1952-ல் வெடிக்கப்பட்டது உண்மையான ஜலவாயு குண்டு அல்லவாம். அது, அக்குண்டின் போலியாம்! வெடிக்கப்பட்ட தீவையே அது விழுங்கிவிட்டதோடு, அந்த இடத்தில் 17 மாடி கட்டிட உயரத்திற்குக் குழியும் பறித்துவிட்டிருக்கிறதாம்.

குண்டு வெடித்ததால் தோன்றிய நெருப்புப் பந்து, உட்பகுதியின் வெப்பம் சூரியனுக்குள்ள வெப்பத்திற்குச் சமமாக இருக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

ஜனநாயகத்தைக் காக்க முதல் பெரும் போர் நடைபெற்றது! மனித நாகரிகத்தைக் காக்க இரண்டாம் பெரும் போர் நடந்தது! இப்பொழுது மனித குலத்தையே காக்க மற்றொரு உலகப் போர் நடத்தப் போவதாக, வல்லரசுகள் கூறினும் கூறுவர்! ஆனால், ஜல வாயு குண்டு மனித குலத்தைக் காக்க உதவாது; ஆனால், உலகையே பாலைவனமாக்கத்தான் துணை புரியும். இந்த உண்மையைத்தான் ஜல வாயு குண்டு பரீட்சை உலகுக்கு எடுத்துக் காட்டுகிறது. இரு முகாமின் நாயகர்களும், இந்த உண்மையைக் கருத்தில் கொண்டு, மனிதகுலம் நீடூழி வாழ வழிவகை செய்ய வேண்டும். ஜலவாயு குண்டு கொடுத்துள்ள அச்சமூட்டல், இச்சூழ்நிலையை உருவாக்கினாலும் உருவாக்கக்கூடும்; அத்தகு நிலை பிறந்தால், அதில் ஆச்சரியமொன்றுமில்லை.

மொழி பெயர்க்கும் இயந்திரம்

விஞ்ஞானிகள் சாதனை!

ஒரு மொழியிலிருந்து மற்றொரு மொழிக்கு மனிதர்களே இதுவரை மொழி பெயர்ப்புச் செய்து வந்தார்கள்; இனி, இயந்திரங்களும் அவ்வேலையைச் செய்யும். அப்படிப்பட்ட மொழி பெயர்க்கும் இயந்திரம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு விட்டது பல விஞ்ஞானிகளும், புலவர்களும் சேர்ந்து இப்புதிய மொழி பெயர்க்கும் இயந்திரத்தைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

சிக்கலான கணக்குகளை விரைவாகப் போடும் இயந்திரத்தின் வகையைச் சேர்ந்தது, இந்த மொழி பெயர்க்கும் இயந்திரம்! இயந்திரத்திற்குள் மொழி பெயர்ப்புக்கு வேண்டிய சாதனங்கள் உள்ளன. தானே டைப் அடிக்கும் டைப் மெஷின் மொழி பெயர்ப்பை டைப் அடித்துக் கொடுக்கிறது.

தற்சமயம் அந்த இயந்திரம் ரஷிய மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துத் தருகிறது. 250 சொற்கள் அந்த இயந்திரத்திற்குத் 'தெரியும்'; இன்னும் பல்லாயிரம் சொற்கள் அதற்குத் 'தெரியக் கூடும்'; பல மொழிகளில் மொழி பெயர்க்கும் ஆற்றலும் ஏற்படும் அதற்குத் தகுந்தவாறு மொழி பெயர்க்கும் இயந்திரம் அமைக்கப்படும்.

சில ஆண்டுகளில் இந்த மொழி பெயர்ப்பு இயந்திரம் வெவ்வேறு நாடுகள் ஒன்றுக்கொன்று விஷயங்களை அதிகமாய்த் தெரிவித்துக் கொள்வதற்குப் பயன்படுமென்று இதனை அமைத்த விஞ்ஞானிகள் கருதுகிறார்கள். இதனால் விரைவாகவும், திட்டமாகவும், எளிதாகவும் மொழி பெயர்க்க முடியும் என்று அவர்கள் எண்ணுகிறார்கள்.

புதுக்கோட்டை தமிழர் வாசகசாலை

திருவள்ளுவர் நகர் தமிழர் வாசகசாலையின் உறுப்பினர்கள் கூட்டம் 28—3—54 இரவு 9 மணிக்கு தோழர் எம். ஐ. நூர்முகம்மது தலைமையில், வாசகசாலை கட்டிடத்தில் நடைபெற்றபோது, 1954-ம் ஆண்டுக்கு தோழர் எம். ஐ. நூர்முகம்மது தலைவராகவும், மு. தனுக்கோடி துணைத் தலைவராகவும், தி. அய்யாக்கண்ணு செயலாளராகவும், ஞ. அ. முனிசாமி, பி. என். முகம்மது அனீபா துணைச் செயலாளராகவும், வீ சுப்பையா பொருள் காப்பாளராகவும், கே. முகம்மது சரீபு, எம். அப்துல் காதர், சம்சுதீன், பி. என். எம். சக்கிரியா, சி. கருப்பையா, ஏ. எம். முகம்மது அனீபா, பி குலாம் கௌஸ் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும், தேர்தெடுக்கப்பட்டனர், இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவை ஏப்ரல் 25-ந் தேதியில் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. பின்னர், அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

'போம் பேசும் ஆற்றலை அதிகரித்துக் கொள்ளத்தான் வெடி ஒத்திகை!'

அமெரிக்கா ஜலவாயு குண்டு பரீட்சை—சீனு கருத்து

லண்டன், ஏப்ரல் 2—

கீழ்க்கோடி சமாதானம் பற்றி நடைபெற இருக்கிற ஜினிவா மாநாட்டில், தனது பேரம் பேசும் ஆற்றலைப் பெருக்கிக் கொள்வதற்காகவே, பசிபிக் கடலில் ஜலவாயு குண்டுகளைப் போட்டு அமெரிக்கா பரீட்சை நடத்துகிறது என பொதுவுடைமை சீனு கருதுகிறது.

ஜினிவா மாநாடு கூட வேண்டிய நாள் நெருங்கிவரும் தருணத்தில், ஜலவாயு குண்டுகளை பரீட்சிக்கப் போவதாக அமெரிக்கா முனைந்ததானது, தற்செயலாக ஏற்பட்ட ஒரு முடிவாகக் கொள்ள முடியாது.

தன்னிடத்தில் மட்டுந்தான் அணுகுண்டு இருக்கிறது என்ற நினைப்பும், அதனால் உலகத்தை அச்சுறுத்துவது தன்னால் மட்டுந்தான் ஆகும் என்ற அமெரிக்காவின் முடிவும், பின்னர் பொய்யாகிவிட்டது. அச்செல்வாக்கு சரிவைச் செப்பனிட்டுக் கொள்வதற்காகவே, இப்புதிய ஜலவாயு குண்டு ஒத்திகை நடத்தப்படுகிறது. இதற்கு எதிர்ப்பும் உலகம் முழுதும் இருந்து கிளம்பி இருக்கிறது.

• • •

வாஷிங்டன், ஏப் 2—

மார்ச் முதல் தேதியன்று வெடித்ததைவிட இன்னும் அதிக சக்தி வாய்ந்த ஹைட்ரஜன் குண்டை இம்மாத இறுதியில் பரிசோதிக்க அமெரிக்கா முடிவு செய்து விட்டதாகக் கூறப்படுகிறது.

முத்து படிப்பகம்

மதுரை, ஏப். 2—

28—3—54 இரவு 8 மணியளவில், படிப்பகத்தின் செயற்குழு கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் வி. வி. தனுஷ்கோடி அருப்புக்கோட்டை முத்து, எம். என். ராய் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், தி. மு. கழகப் பொதுக் குழு தீர்மானத்தை ஆதரித்தும், படிப்பகத்தின் 2-வது ஆண்டு விழாவை 18—4—54ல் நடத்துவதெனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இந்தியா, 1953-ம் ஆண்டில், சுமார் 6,39,06,000 கெஜம் கைத்தறித் துணியை ஏற்றுமதி செய்திருக்கிறது; 1952-ம் ஆண்டில், சுமார் 5,50,04,000 கெஜம் கைத்தறித் துணிகளே இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாயின.

ஐ. நா. குழுவுடன் ஒத்துழைக்க போலந்து மறுப்பு

சாசனத்திற்கு முரணாகக் குழு பணியாற்றுவதே காரணமாம்

கட்டாய வேலை முறைகளைப் பற்றி ஐ. நா. நிலையம் நிறுவியுள்ள பிரத்தியேகக் கமிட்டி பரிசீலனை செய்வதற்கு ஒத்துழைக்க முடியாது என போலந்தில் நடைபெறும் கம்யூனிஸ்டு ஆட்சி மறுத்துவிட்டது.

இத்தகைய நடவடிக்கைகளுக்கு ரஷ்யாவும், செக்கோஸ்லாவாக்கியாவும் ஏற்கனவே தங்கள் மறுப்பைத் தெரிவித்துள்ளன.

சர். இராமசாமி முதலியாரின் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள ஐ. நா. பிரத்யேகக் கமிட்டி தெரிவித்த முடிவுகளுக்கு விளக்கம்கூற போலந்து மறுத்துவிட்டது. அரசியல் துறையில் கட்டாயப்படுத்தவும், பொருளாதாரத் துறையில் பயன்படுத்தவும் கட்டாய வேலை முறையை உபயோகிக்க போலந்தில் நடைபெறும் கம்யூனிஸ்டு ஆட்சிமுறை இடம் அளிப்பதாக இந்தக் கமிட்டி தெரிவித்தது. ஆனால் போலந்திலுள்ள கட்டாய வேலை முகாம்கள், அதனால் பாதிக்கப்பட்டவர்கள் எவ்வளவு என்பதைப் பற்றி இக்கமிட்டியால் நிச்சயிக்க முடியவில்லை

ஐ. நா. சாசனத்திற்கு முரண்பட்ட முறையில் இந்தக் கமிட்டி வேலை செய்வதாக போலந்து குற்றம் சாட்டுகிறது.

பட்டுப் புழு வளர்ப்பு

சர்க்கார் மசோதா

சென்னை, ஏப்ரல் 3—

மாநிலத்தில் பட்டுப் புழு வளர்ப்பதை ஒழுங்குபடுத்த சென்னை சர்க்கார் ஒரு மசோதா பிரசுரித்துள்ளனர். அதில் குறிப்பிட்டிருப்பதாவது :—

இம்மசோதாவின் கீழ் லைசென்சு பெற்றுள்ள ஒருவரிடமிருந்து பெறும் பட்டுப் புழு விதைகளைத் தவிர வேறு விதைகளிலிருந்து யாரும் பட்டுப் புழுக்களை வளர்க்கக் கூடாது. லைசென்சு பெறாமல் யாரும், பட்டுப் புழு விதை உற்பத்தி செய்யவோ, சேமித்து வைக்கவோ, எடுத்துச் செல்லவோ அல்லது வேறு விதமாக விற்கவோ கூடாது.

முகம்மது அலி முடிவு!

காராச்சி, ஏப். 1—

இம்மாத இறுதிக்குள் பிரதம மந்திரி முகம்மது அலி தாம் வகிக்கும் முஸ்லீம் லீக் பதவியை ராஜிநாமா செய்துவிடுவார் என்று தெரிகிறது. அதிகார பூர்வமாக இதைப் பற்றி அறிவிப்பு ஒன்றும் இல்லையென்றாலும், லீக் தலைவர்களிடம் ராஜிநாமா விஷயத்தை அறிவித்துவிட்டதாகத் தெரிகிறது.

இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் இடையே விமானப் போக்குவரத்தை முதன் முதலாக, 1929 மார்ச் 30-ந் தேதியன்று இம்பீரியல் ஏர்வேஸ் ஸ்தாபனம் ஆரம்பித்து வைத்தது. விமானப் போக்குவரத்து லண்டனுக்கும் காராச்சிக்குமிடையே நடத்தப்பட்டு வந்தது.

கழகச் செய்திகள்

★

வலங்கைமானில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

30—3—54 மாலை 6 மணிக்கு இவ்வூர் கிளைக்கழக சார்பில், வரதர் சன்னதித்தெருவில், தோழர் பாண்டுரங்கன் தலைமையில் நடைபெற்றப் பொதுக் கூட்டத்தில், தோழர் இரா. நெடுஞ்செழியன், "தற்கால அரசியல் நிலையும், புதுக் கல்வித் திட்டத்தின் விளைவும்," என்பது பற்றி சொற்பொழிவாற்றினார்.

கூட்டத்திற்கு தலைமை வகிக்க ஒப்புக்கொண்டதற்கு இணங்க தஞ்சை மாவட்ட செயலாளர் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் கூட்டம் ஆரம்பித்த சிறிது நேரத்திற்கெல்லாம் நாகையிலிருந்து திரும்பி வந்து, குறித்த நேரத்திற்கு வர இயலாமைக்கு வருந்தியும், அண்மையில் தஞ்சையில் நடக்க இருக்கும் மாவட்ட மாநாட்டுக்கு யாவரும் வந்து சிறப்பிக்குமாறும்கேட்டுக் கொண்டார்.

மணப்பாறையில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

28—3—54 மாலை 6 மணிக்கு, தி மு கழகப் பொதுக் கூட்டம் திரு. வி. க மைதானத்தில் துணைச் செயலாளர் என். வடிவேலன் தலைமையில் நடைபெற்றது தலைவர், தி. மு. கழகம், மக்களுக்குச் சேவை செய்ய தோன்றியிருக்கிறது என்றும் குறிப்பிட்டார். அடுத்துத் தோழர் மணவை மதிவாணன் புதிய கல்வித் திட்டத்தை கண்டித்துப் பேசினார்.

இறுதியில் தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் ஆச்சாரியார் சர்க்கார் ஏற்பட்டதிலிருந்து மக்களுக்குஎன்னென்னதொல்லைகள் ஏற்பட்டதென்றும் புதுவை உரிமைக் கிளர்ச்சியை ஆதரித்தும் பேசினார். அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குனியமுத்தூர் தி. மு. கழகம்

29—3—54ல், தி மு க. திடலில், தோழர் கி. திருவேங்கிடம் தலைமையில், தோழர்கள் இரா. ஜெகநாதன், வெ. கிருஷ்ண மூர்த்தி, தங்கமாணிக்கம் ஆகியோர் பேசினர். தோழர் கு அ. மனோகரனின் துணைவியார் தந்தை மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

பொன்மலை—மேலக்கற்கண்டார் கோட்டை தி. மு. கழகம் (கிளை)

25—3—54 மாலை 7 மணிக்கு கழகக் கட்டிடத்தில், செயலாளர் எ. சுந்தரம் தலைமையில் நிர்வாகக் குழுக் கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் வி தனுஷ்கோடி, செம்மேமலை, சாமியப்பா, அருப்புக்கோட்டை முத்து ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது; 12—1—54 தேதி முதல் 23—3—54 முடிய கழக வரவு—செலவு கணக்கு பரிசீலிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டது; தி மு. க. பொதுக் குழு தீர்மானங்கள் வரவேற்கப்பட்டது.

சாயர்புரத்தில் தி.மு.கழக பொதுக்கூட்டம்

14—3—54ல், எவரான்ஸ் மைதானத்தில், தி. மு. கழகச் சார்பில், தோழர் எஸ். ஆர். பெருமாள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது அத்துக்குடி தோழர் எம். சத்தி னம் கழகக்கொள்கைகளை விளக்கியும், அரசியல் பொருளாதாரம், சமூக சீர்திருத்தத் துறைகளில் கழகம் செய்துவரும் தொண்டுகளை விளக்கியும் விரிவுரையாற்றினர்.

திருவண்ணாமலை நகர தி. மு. கழகம்

28—3—54 மாலை 4 மணிக்கு தோழர் ப உ. சண்முகம் தலைமையில் தி. மு. கழக அலுவலகத்தில், பொதுக்குழு உறுப்பினர் தேர்தல் நடைபெற்றது:- ப. உ. சண்முகம்—செயலாளர்: வ. குமாரசாமி—துணைச் செயலாளர்; எ. கலில் சாயபு—பொருளாளர்; அ. துரைஅண்ணாமலை—விளம்பர உறுப்பினர்; தோழர்கள் க. இராசமாணிக்கம், எம் லோகநாதன், மா. நாராயணசாமி, எஸ். ராசசேகரன், சே. சிவலிங்கம், முருகையா, இ. வி. தர்மலிங்கம், இ. வி. அண்ணாமலை, வெள்ளையப்பன், மா. வேடியப்பன், ஆகியோர் கமிட்டி உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சோழங்கநல்லூரில் தி.மு.க. பொதுக்கூட்டம்

29—3—54 மாலை 6 மணிக்கு தி. மு. கழகச் சார்பில், தோழர் வி. கே. கோவிந்தராசு தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் எஸ்.எம் வைத்தியலிங்கம், பராங்குசம் ஆகியோர் பேசினர்.

பின்னர், தோழர் மு. கருணாநிதி அவர்கள் விவசாயிகளின் இன்றைய நிலைமைப் பற்றியும், அவர்களை, நாட்டிலுள்ள கட்சிகள் நாச பாதைக்கு அழைத்துச் செல்வதையும், ஆச்சாரியார் கல்வித் திட்டத்தைப் பற்றியும் கண்டித்துப் பேசினார்.

மேட்டுப்பாளையம் தி. மு. கழகம்

நீலகிரி, மார்ச் 31—

29—3—54 இரவு 8 மணிக்கு கழக அலுவலகத்தில் தோழர் வி. சண்முகநாதன் தலைமையில் செயற்குழு கூடி கழக ஆக்க வேலை சம்பந்தப்பட்ட திட்டங்கள் வகுத்து ஏப்ரல் மாதத்தில் பொதுக்கூட்டம் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

புதூர் தி. மு. கழகத் துவக்க விழா

28—3—54ல், தோழர் க. அப்பணசாமி தலைமையில் தி. மு கழகத் துவக்க விழா நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் அப்பணசாமி செயலாளராகவும், கி. துரைச்சாமி துணைச் செயலாளராகவும், ச. பச்சக்கனி பொருளாளராகவும், வீ. பாலு, க. வெள்ளைச்சாமி விளம்பர உறுப்பினர்களாகவும், ஆ. கன்னிச்சாமி, சௌந்திரபாண்டியன நிர்வாகக் குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அருப்புக்கோட்டை பெரியார் முத்து அவர்களின் மறைவுக்கு அனுதாபம் கொண்டதுடன், தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

மாதுங்கா (பம்பாய்) தி. மு. கழகம்

28—3—54 மாலை 6 மணிக்கு தோழர் போ. ஜோசப் தலைமையில் நிர்வாகிகள் தேர்தல் கூட்டம் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் பொன். திர. சபாபதி, செயலாளராகவும், போ. ஜோசப், துணைச் செயலாளராகவும், இ. என். எஸ். பிச்சையா பொருளாளராகவும், ஜே ஜோதி நாயகம், ஜே எஸ். இலாசரஸ், க. மன்னூர், போ. தர்மராஜ், ஈ. அருணாசலம், கோவைக் கதிரவன், என் பெருமாள், எம். கே. துரைசாமி, என். எஸ் பாண்டியன், தோது அன்புச்செழியன், எ. ஆசீர்வாதம், எஸ் தாமரைச் செல்வன், பெ. வரதராசன் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கடவுளே!

★

அண்டங் களெலாம் அலுவல் படுதல்
கண்டிங் குலகோர் கடவுள் பொருள் ஒன்(று)
உண்டென் றிடுவார்; அதை வான் உயரக்
கொண்டா டிடுவார் கோயில் களிலே

இல்லா ததுஒன் றினையே இவர்கள்
கல்லாக் கிடுவார்! உளனேல் கடவுள்
பொல்லான்; அவனைப் புகழ்தல் பிழை என்(று)
எல்லாம் அடியேன் எதிர்வா திடுவேன்!

நோயே நுழையா மனை ஏ து? பசிப்
பேயோ டழிவோம்; பிரமா, உனையோ
தாயோ டுவமித் திடுவார் தரையோர்?
நீயோ நிமலன்? நினையோ தொழுதல்?

வான் நின் றுமழை வர, நம் வயல்கள்
தான் நெல் தருமேன் றிடினும் மனிதர்
என் நின் றனை ஏற் றிவோண, இறையே?
நீ நல் லனையேல் நினை அஞ் சுவதேன்?

உன்னா லேமிக உலகின் றதனால்
என்னத் தை அடைந் தனரோ இவரே?
பொன்னின் பின்னே டிடும் இப் புவியின்
சின்னத் தனம் நீங் கியதோ சிறிதும்?

பொதுள் மக் களிடை பொதுவா கிட நீ
அருள் செய் தனையோ? அதுதான் இலையே!
ஒரு போ தும் இனி உனை நம் பிடில் எம்
இருள் போய் அகலும் என நின் றழலோம்!

—[சுதந்திரன்]

கமுதி தி. மு. கழகம்

28—3—54ல், கழகக் காரியாலயத்தில், தம்பித்துரை தலைமையில் கழகச் செயற்குழு கூடி அருப்புக்கோட்டை முதது, வி வி தனுஷ்கோடி மறைவுக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

மணிநகர் தி. மு. கழக (கிளை) திறப்புவிழா

ஆமதாபாத், ஏப் 2—

28—3—54ல், தி. மு கழக இல்லத் திறப்பு விழா தோழர் தி. நெடுமாறன் தலைமையில் நடைபெற்றது. தோழர் மு இருட்டினன் கழகத் தோழர் களின பணி பற்றி விளக்கினார். தோழர்கள் பலர் விளக்கவுரையாற்றினர்.

திருவில்லிபுத்தூர் தி. மு. கழக பொதுக் கூட்டம்

28—3—54 இரவு 7 மணியளவில் நாயர் சதுக்கத்தில் தி. மு. கழகச் சார்பில், மா. குருசாமி தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பாலு, சி பி சிற்றரசு ஆகியோர் விரிவுரையாற்றினர்.

'சௌந்திரபாண்டியன்' தோற்றம்

விருதுநகர், மார்ச் 30—

தோழர் ஏ. வி பி. ஆசைத்தம்பி அவர்களின் துணைவியார் தோழியர் பரமேசுவரிக்கு 28—3——54ல், ஆண் குழந்தை பிறந்து, தாயும் சேயும் நலம். குழந்தைக்கு 'சௌந்திர பாண்டியன்' எனப் பெயரிடப்பட்டிருக்கிறது.

தீ மிதித்தல்

கட்டிமேடு, மார்ச் 31—

29—3—54 மாலை 4 மணிக்கு வடபாதி திரௌபதையம்மன் கோவிலில் நடைபெற்ற 'தீ மிதித்த'லில், இவ்வூர் தி. மு. கழகச் செயலாளர் ஜி. எஸ் முத்து தீ மிதித்து, 'புரட்டர்களின் பிழைப்புக்காக தேடிக்கொண்ட வேலையாகும்,' என்று நிரூபித்தார்.

நன்றி

தேவபாண்டலம் தி. மு. கழகப் பொதுக் கூட்டத்தில் 2 குழந்தைகளுக்குப் பெயர் சூட்டியதில் 'நம் நாடு' வளர்ச்சிக்காக அளிக்கப்பட்ட ரு. 2 தோழர் ஏ கோவிந்தசாமி எம். எல். ஏ., அவர்கள் மூலம் வரப்பெற்றோம்-நன்றி புடையது-பொறுப்பாளர்.

முற்போக்கு வாசகசாலை

கும்பகோணம், மார்ச் 31—

28—3—54 மாலை 7 மணிக்கு தோழர் டி. மார்க்கண்டன் தலைமையில் பொதுக்குழு கூட்டம் நடைபெற்றபோது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:- தலைவர்: டி. மார்க்கண்டன்; துணைத் தலைவர்: ஓ. பி. கோவிந்தசாமி; செயலாளர்: வி. பெரியசாமி; துணைச் செயலாளர்: கே சின்னையன்; பொருளாளர்: இ. மகாலிங்கம்; கமிட்டி உறுப்பினர்கள்: வி ராஜமாணிக்கம், எஸ். மகாலிங்கம், எம். பெரியசாமி, வி. இருளாண்டி, ஆர். ராமையன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அறிவுப் பூங்கா

மதுரை வட்டம் கத்தம் சத்திரப்பட்டி கிராமம் 'அறிவுப் பூங்கா' ஆரம்பக் கூட்டம் 21—3—54ல், மதுரை மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றபோது உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:-செயலாளர்: வீ வீ. முத்துவீரன்; துணைச் செயலாளர்; கே. எஸ். மணி; பொருளாளர்: ஓ. பெரியசாமி; மாவட்டப் பிரதிநிதிகள்: மூ. வீரபத்திரன், எஸ். டி. பிச்சை; செயற்குழு உறுப்பினர்கள்: மே. ராமன, வீ. மாயாண்டி மு குருசாமி, பி. கோபாலகிருஷ்ணன், சி. சாமிநாதன், கா. லட்சுமணன்.

டுவிபுரம் கலைக் கழகம்

அத்துக்குடி, மார்ச் 31—

28—3—54 தோழர் வெள்ளைப்பழம் தலைமையில் நடைபெற்ற அமைப்புக் குழு கூட்டத்தில், கீழ்க்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

செயலாளர்: எம். ராஜபாண்டியன்; துணைச் செயலாளர்: பி. பொன்னுசாமி; பொருளாளர்: ஆர் காசி; கமிட்டி உறுப்பினர்கள்: பி தங்கமுத்து, எம். வயணப்பெருமாள், வேலாயுதம், கல்லழகு, மார்த்தாண்டன், எம். பி. பி. சாமி, பால்ராஜ், தங்கராஜா, வடிவேல், பிச்சமணி.

சீர்திருத்தத் திருமணம்

முக்கூடல், மார்ச் 30—

நெல்லை மாவட்ட தி. மு. கழக துணைச் செயலாளர் தோழர் ச. கந்தசாமி—தோழியர் மீனாட்சி சுந்தரி சீர்திருத்தத் திருமணம் தோழர் ஆ க. திருவடி முத்து தலைமையில் மணமகன் இல்லத்தில் நடைபெற்றது. தோழர்கள் ச. வீரபாகு. ஆ திராவிட மணி பி பி. சாமி ஆகியோர் சீர்திருத்த திருமணம் பற்றி பேசினர்.

காரைக்குடியில் தி. மு.க. கட்டிடத் திறப்பு விழா

பொதுக்கூட்டத்தில் தோழர்கள்சொற்பொழிவு

காரைக்குடி, ஏப். 3—

28—3—54ல், இந்நகர் தி. மு. கழகத் திறப்பு விழா தோழர் ரெத்தினவேலு தலைமையில் நடைபெற்றது. அருப்புக்கோட்டை தோழர் எம். எஸ். ராமசாமி அவர்கள் கழகக் கொடியை ஏற்றிவைத்துச்சொற்பொழிவாற்றினார்.

தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல் ஏ., அவர்கள் கழகக் கட்டிடத்தை திறந்து வைத்துப் பேசுகையில், கழகத்திற்கென சொந்தமாக ஒரு கட்டிடம் இருக்கவேண்டிய அவசியம் பற்றியும், ஒவ்வொரு வாரமும் கழகத் தோழர்கள் கூடிப் பேசப் பழகிக்கொள்ள வேண்டுமென்றும், கழகச் சம்பந்தப்பட்ட தின, வாரப் பத்திரிகைகள் அனைத்தையும் வரவழைத்துப் படிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

தோழர் எம். எஸ். ராமசாமி பேசுகையில், கழகத் தோழர்கள் கண்ணியத்தை வளர்த்துக் கட்டுப்பாடுடன் வளர்ந்து, ஒழுக்கத்தை உயர்த்த வேண்டுமென்றார்.

*　*　*

பொதுக்கூட்டம்

அன்று மாலை 6 மணிக்கு இவ்வூர் கார்த்தி திடலில், தோழர் இராம வெள்ளையன் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் பேசுகையில், தி. மு. கழகம்தான் வருங்காலத்தில் இந்நாட்டை ஆட்சி செய்யும் என்று குறிப்பிட்டார்.

அடுத்து, தோழர் எம். எஸ். இராமசாமி பேசுகையில், காங்கிரஸ், மதத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்த கட்சி என்றும், நாடு என்றால், நிலப்பரப்பு மட்டும் ஒன்றாக இருப்பதால் நாடு ஆகிவிடாது என்றும், மொழி, கலாசாரம், நாகரிகம் இவைகள் ஒன்றுபட்டதுதான் நாடு என்றும், ஆகவே, நாம், இவைகளின்படி பார்த்தால், எவ்வகையிலும் வடநாட்டினரின் பண்புக்கும்—இயல்புக்கும் நாம் மாறுபட்டவர்களாகவே இருக்கிறோம் என்பதைச் சுட்டிக்காட்டி, திராவிட நாடு கேட்பதின் அவசியத்தை விளக்கிப் பேசினார்.

அடுத்து தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., பேசுகையில், 'தினமணி'யின் ஆதாரமற்ற, அர்த்தமற்ற செய்திகளைப் பிரசுரிப்பதைக் கண்டித்தார், கைத்தறி நெசவாளர்கள் விடயத்தில் ஆளுமன்ற சர்க்கார் ஆமை வேகத்தில், செல்லுவதைக் குறிப்பிட்டார்; 'செஸ்' வரி மூலம் சிறிய உதவி செய்து, கைத்தறியாளர்களை ஏமாற்ற வேண்டாமென ஆட்சியாளரை எச்சரித்தார்; வடநாட்டின் வஞ்சகத்தால், திராவிடர்களின் நாகரிக வாழ்வு நலிந்துவிட்டதைச் சுட்டிக் காட்டினார்; புதிய கல்வித் திட்டத்தின் மூலம் அரசாங்கம் ஆசிரியர்களை பொய் சொல்ல பழக்குகிறார்கள் என்றும், திட்டத்தை கண்டித்தும், மும்முனைப் போராட்டங்களைப் பற்றி விளக்கியும் பேசினார்.

கூட்ட ஆரம்பத்தில், பாண்டியன் படிப்பகச் சார்பில் தலைவர்களுக்குக் கைத்தறித் துண்டுகள் வழங்கப்பட்டன.

*　*　*

வரவேற்பு

இன்று இந்நகர் பாண்டியனூர் உணவு விடுதி தோழர்கள் சார்பில், மாலை 4 மணிக்கு தோழர் எ. கோவிந்தசாமி, எம். எல். ஏ., அவர்களுக்கு வரவேற்பு இதழொன்றை விடுதி செயலாளர் வாசித்தளித்தார். தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் வரவேற்புக்கு நன்றி கூறினார்.

மலேயாவில் மறத் தமிழர் வெற்றி!

—o—

தமிழ் மொழிக்கே முதலிடம் தர ஆய்வுக்குழுவினர் முடிவு

ஆரிய மொழிகளைத் திணிக்கச் செய்த சூழ்ச்சி முறியடிக்கப்பட்டது

மலேயா பல்கலைக் கழகத்தின் ஆலோசனைக் குழு, மலேயாவில் குடியேறி, நிரந்தரமாக வாழத் தீர்மானித்து விட்ட ஆறு லட்சம் இந்திய மக்களின் தேவையை நிறைவேற்றும் வகையில், இந்தியக் கலைப் பகுதியை எவ்வாறு அமைக்கலாம் என்று ஆராய்ந்து கொண்டுள்ளது.

இந்திய மக்கள் தம் தம் மொழியை இந்தியக் கலைப் பகுதியில் இடம் பெறச் செய்ய முயன்றதாலும், இவணின்று சென்று ஓர் அறிக்கை தயாரித்துத் தந்த—நீலகண்ட சாஸ்திரியாரின கருத்து பலாது மாறுபாட்டிற்கு இடமானதாலும்—பல்கலைக் கழகம் அந்தத் திட்டத்தையே கைவிட்டு விடக்கூடிய நிலை பிறந்தது.

இந்நிலையில், பல்கலைக் கழக நிர்வாகிகள், இந்தப் பகுதியை விரைவில் தொடங்கவும், பிற இந்திய மொழிகளை விட தமிழுக்கே முதலிடம் அளிக்கவும் கருதியுள்ளனர். காரணம், மலேயாவில் குடியேறியுள்ள இந்திய மக்களுள் தமிழர்களே பெரும்பாலோராக இருப்பதேயாகும்.

தென்னாட்டின், தமிழ் மாவட்டங்களிலிருந்து குடியேறியவர்களே அங்கு மிகப் பலராதலின், அவர்களது தேவையை முதற்கண் நிறைவேற்றுவதே நியாயமாகும் என்று பல்கலைக் கழக ஆய்வுக் குழு வலியுறுத்தி இருக்கிறது.

★ தமிழர்களே பெரும்பாலும் சென்று நிரம்பியுள்ள மலேயாவின் பல்கலைக் கழகத்திலும், வடமொழியையோ, இந்தியையோதான் நுழைக்கவேண்டும் என்று செய்த சூழ்ச்சித் திட்டங்கள் தோல்வியுற்றது மகிழ்ச்சியளிப்பதாகும். மலேயா தமிழர்களது ஊக்கமும், முயற்சியும் வெற்றி பெற விழைகிறோம்.

நீக்கப்பட்ட பிரதமர் ஜகன் மீண்டும் கைது

ஜார்ஜ்டவுன், ஏப். 5—

இங்ககருக்குள் வதியும்படி கட்டுப்படுத்தும் தடையை மீறியதால், பிரிட்டிஷ் கயானாவின் விலக்கப்பட்ட பிரதமர் ஜகன், நகருக்கு வெளியில் கைது செய்யப்பட்டார். நீதிபதிமுன் நிறுத்தப்படும் வரை, அவர், ஜாமீனில் விடுதலை அளிக்கப்படமாட்டார் என்றும் தெரிகிறது.

சென்னை சட்ட சபை அரசாங்கக் கட்டிடம்

நிர்வாகக் குழு உறுப்பினர்கள் தேர்தல் முடிவு

சென்னை, ஏப். 4—

2—4—54-ல் நடைபெற்ற சென்னை சட்டசபை அரசாங்க கட்டிட நிர்வாகக் குழு உறுப்பினர் தேர்தல் விவரம் கீழே தரப்பட்டுள்ளது :—

	வாக்குகள்
ஏ. கோவிந்தசாமி	29
ஏ. கே. மாசிலாமணி செட்டியார் (காங்)	21
ஏ. இராமசாமிதேவர் (காங்)	21
என். டி. ஆதித்தன் (பிரஜா.)	19
என். இராமசாமி கவுண்டர் (காமன்)	17
ஆர் ஏ. நடராசமுதலியார் (காங்)	15
எம். ஆர். இராமசந்திரன் (காங்)	15
ஏ. எம். சம்பந்தம் (காங்)	13
கே ஆர் சம்பந்தம் (திராவிடர் கட்சி)	12
என் என் ரெய்ஸ் பேய்ல் (பி சோ)	13
கெ. அரங்கநாதன் (உழைப்)	10
வி. கோபாலகவுண்டர்* (உழைப்)	1

*இவர் தோல்வியுற்றார்.

குறிப்பு:—தோழர் ஏ. கோவிந்தசாமி அதிக வாக்குகளுடன் முதன்மையாக வெற்றிப் பெற்றது பாராட்டத் தக்கது.

வெற்றி மகிழ்ச்சி திராமுன் வேதனைக் காட்சி!

——:o:——

பஸ்லுல் ஹக் வீட்டிற்கு எதிரி கண்டனக் கூச்சல்!

டாக்கா, ஏப். 4—

கிழக்கு வங்க மக்கள், ஐக்கிய முன்னணிக் கட்சியின் ஆட்சிக்கு வருவதைக் குறித்துக்கொண்ட மகிழ்ச்சி, தமது மந்திரி சபையினரைப் பற்றிய விவரத்தை பஸ்லுல்ஹக் அறிவித்தவுடன், நிலைகுலையலாயிற்று.

ஹக் தன்னுடைய நெருங்கிய உறவினர் ஒருவரை அமைச்சராக நியமித்திருப்பதை எதிர்த்தே—ஐக்கிய முன்னணியின் மகத்தான வெற்றிக்குக் காரணமாக இருந்த மாணவர்களே, அவரது வீட்டுக்கு எதிரில், பெரும் எதிர்ப்பு முழக்கம் செய்தனர்.

மாணவர்கள் தமது கண்டனக் கூச்சலில் "தனிச் சலுகையைச் சகிக்கமாட்டோம்" "உறவினர்களுக்கு உதவ இடந்தர மாட்டோம்" என்று முழங்கியுள்ளனர்.

வங்கப் பிரதமர் பஸ்லுல் ஹக் ஒரு பேட்டியில், மந்திரி சபை விரைவில் விரிவுபடுத்தப்பட்டு, அமைச்சர் பொறுப்புக்களுக்கு ஏற்ப பங்கிடப் பெறும் என அறிவித்துள்ளார்.

ஐக்கிய முன்னணியில் பெரும்பாலோரான அவாமி லீக் கட்சியினர் முழு அளவான அமைச்சர் குழு அமைக்க வேண்டுமென்றும் தமது கருத்தை வலியுறுத்தி வருவதால், சிறிது சிறிதாக அமைக்கப்பட்டு வரும் ஹக்கினுடைய தொடக்க மந்திரி சபையில், அவாமி லீக் கட்சியினர் எவரும் இன்னும் அமைச்சர் பதவி ஏற்க இசையவில்லை.

டாக்கா மாதர்கள் அறைகூவல்!

டாக்கா, ஏப்ரல் 2—

ஐக்கிய முன்னணி டிக்கெட்டில் கிழக்கு வங்க அசெம்பிளிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட 9 பெண்மணிகளை பாராட்டுவதற்கு இங்கு ஓர் கூட்டம் நடைபெற்றது. டாக்காவின் சரித்திரத்திலேயே, பெண்களால் நடத்தப்பட்ட முதல் அரசியல் கூட்டம் இதுவேயாகும்.

"பாக்—அமெரிக்க ஒப்பந்தம் இந்த நாட்டின் நன்மைக்கு உகந்ததல்ல," என்று அவர்கள் குறிப்பிட்டு . . .னர்.

பிரெஞ்சு பிரதமர் காரை கவிழ்க்க முயற்சி

சேனாதிபதியை நீக்கியதால் மக்கள் ஆத்திரம் கொண்டனர்

பாரிஸ், ஏப் 4—

இந்தோ—சீனப் போர் வீரர்கள் ஞாபகச் சின்னத்திலிருந்து பிரெஞ்சுப் பிரதமர் லேனியல் தனது காரில் திரும்பிவந்து கொண்டிருக்கையில், அவரது மோட்டாரைக் கவிழ்த்துவிடும் நோக்கத்துடன், 'மார்ஷல் ஜுயின் வாழ்க', என்ற முழக்கத்துடன் பிரதமர் காரை, பொதுமக்கள் வளைத்துக்கொண்டனர்.

"பதவியை ராஜினாமா செய்" என்று இட்டுக்கொண்டே, கூட்டத்தினர் நெருங்கி 10 நிமிட நேரம் அவரை திக்கு முக்காடச் செய்தனர். போலீசார் தடிகளை எடுக்காமலே மக்களுடன் போராடி மக்கள் கொதிப்பை சமாளித்தனர் என்று தெரிகிறது.

பிரான்சின் பிரதம இராணுவத் தளபதி மார்ஷல் ஜுயின் நீக்கப்பட்டதே இந்த ஆர்ப்பாட்டத்திற்குக் காரணமாம்.

நீர்வளிக் குண்டு ஆராய்ச்சி!

அமெரிக்க சோதனையே ஆபத்து!

கல்கத்தாவையும் தீண்டும்!

கல்கத்தா, ஏப்ரல் 5—

ஏப்ரல் மத்தியில், பசிபிக் கடலில், நீர்வளிக் குண்டு ஆராய்ச்சி நடத்த அமெரிக்கா திட்டமிட்டிருக்கிறது.

அதுகாலை, காற்று கல்கத்தா திசை நோக்கி வீசுமானால், அந்த ஆராய்ச்சியில் விளையும், குண்டு வெடித்ததனாலாகிய மரணப் புழுதி, கல்கத்தாவை அடுத்த பகுதிகளிலெல்லாம் படியும் என்றும் நீண்ட தொலைவு காரணமாக, அந்த அணு தனது ஆற்றலை இழந்து அற்றுப்போய் விடுமாதலின் — எவரையும் பாதிக்காது—என்று கருதலாம் என—டாக்டர் மேகநாத சாகே நேற்று கல்கத்தாவில் அறிவித்துள்ளார்.

★

மனித இனத்தையே அழிக்கும் குண்டு

ரஷ்யாவிடம் இருக்கிறதாம்!

லண்டன், ஏப்ரல் 5—

மனித இனத்தையே பூண்டோடு நாசமாக்கக் கூடிய சக்தி வாய்ந்த ஹைட்ரஜன் குண்டை ரஷ்யா தயாரித்திருக்கும் தகவல்கள் தமக்கு கிடைத்திருப்பதாகவும், தாம் இது பற்றி நிச்சயமாக சொல்ல முடியாதென்றும் பிரிட்டிஷ் பார்லிமெண்டில் முன்னாள் வெளிநாட்டு மந்திரி மாரிசனும் பௌனர் பிராக்கேயும் தெரிவித்தனர்.

பிரிட்டிஷ் விஞ்ஞானிகள், அம்மாதிரி குண்டை தயாரிக்க முடியாதென்று கருதுகிறார்களென்றும், ஜலவாயுவை எரிக்கவேண்டிய உஷ்ண சக்தியே பிரமாண்டமானதென்றும், ஹைட்ரஜன் (உப்பு வாயுவை) எரிக்க மேலும் உஷ்ண சக்தி வேண்டும் என்றும் அத்தகைய உஷ்ண சக்தியை எப்படி உண்டாக்குவது என்பதை இதுவரை யாரும் கண்டுபிடிக்கவில்லையென்றும் இவர்கள் சொல்கின்றனர்.

இன்று அறிவித்தன.

இங்கு தலைவர்கள் வந்த . . . இக்கிராமங்களிலுள்ள பிரெஞ்சு இந்திய போலீசார் ஆயுதங்களை சரணடைந்து விட்டு விடுதலை பெற்ற மக்களுடன் சுதந்திர மனிதர்களாகத் தொண்டாற்றுவதாக உறுதி கூறினார்கள்.

இதுவரை பிரெஞ்சிந்திய சோஷலிஸ்டு கட்சி 26 கிராமங்களுக்கு இவ்வாறு விடுதலை அளித்திருக்கிறது.

ஓட்டேரி 19-வது வட்டம் தி. மு. க. நிதி அளிப்புப் பொதுக்கூட்டம்

சென்னை, ஏப்ரல் 5—

நேற்று மாலை தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற ஓட்டேரி நிதி அளிப்புக் கூட்டத்திற்கு, அவ்வட்டச் செயலாளர் தோழர் எம். முத்து அவர்கள் தலைமை வகித்தார்.

தோழர்கள் அ. பொன்னம்பலனார், க. அன்பழகன், ஏ. கோவிந்தசாமி எம். எல் ஏ. ஆகியோர் இயக்கத்தின் இலட்சியத்தை விளக்கிப் பேசினர்.

பின்னர் தோழர் ஏ. கே. சாமி (வட்டப் பொருளாளர்) வழக்கு நிதிக்கு ரூ. 250 பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களிடம் சேர்ப்பித்தார்.

மற்றும் கர்நாடிக் மில்ஸ் ஸ்பின்னிங் தொழிலாளர் சார்பில், ரூ. 21-ம், 39-வது வட்ட மறுமலர்ச்சி நூல் நிலையத்தின் சார்பில் ரூ 19—3—0-ம் அளிக்கப்பட்டது. (மொத்தமாக—நிதிக்கு அளிக்கப்பட்ட தொகை —ரூ. 290—3—0 ஆகும்.

இறுதியாகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் பேசியபின் நன்றி கூறுதலுடன் கூட்டம் முடிவுற்றது.

இக்கூட்ட இறுதியில் தோழர் அர்ச்சுனன் பெண் குழந்தைக்கு 'மல்லிகா' என்று பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் பெயர் சூட்டினார். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1—0—0 அன்பளிக்கப்பட்டது—ஏற்றுப்பெற்றோம்—நன்றியுடையது—பொறுப்பாளர்.

• • •

தோழர் சுப்பிரமணியம் அவர்கள் பெண் குழந்தைக்கு 'ராணி' என்றும் பொதுச் செயலாளர் அவர்கள் பெயர் சூட்டினார்.

சிவில் விமானப் போக்குவரத்து இலாகா, இப்பொழுது 77 விமான நிலையங்களை நிர்வகித்து நடத்தி வருகிறது. 1930-ம் ஆண்டில், நான்கு விமான நிலையங்களும், யுத்தத்திற்குப் பிறகு 45 விமான நிலையங்களுமே இருந்தன.

இராயபுரம் தி. மு. கழக செயற் குழு உறுப்பினர்களுக்கு

★

'6-4-54 மாலை 6 மணிக்கு, சென்னை, இராயபுரம், நெ. 79, பி. வி. கோயில் தெருவிலிருக்கும் கழக அலுவலகத்தில், இராயபுரம் தி. மு. கழக செயற் குழுக் கூட்டம் நடைபெறும். செயற் குழு உறுப்பினர்களும், ஆதரவாளர்களும் தவறாது கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்," எனச் செயலாளர் மு. வரதன் அறிவிக்கிறார்.

உரிமைக்கும்-வளர்ச்சிக்கும் இந்திமொழி கேடு பயக்கும்!

——(:)——

'கல்விப் பயிற்சிக்குத் தாய் மொழியே தகுதியுடையதாகும்'

பூனா பல்கலைக் கழக நிர்வாகக் குழு அறிவிப்பு

பூனா, எப்ரல் 4—

"உழவு, பொறியியல், மருத்துவக் கல்லூரிகளில், பம்பாய் அரசினரின நோக்கத்திற்கேற்ப, 'இந்தி'யையே பயிற்றும் மொழியாக்குவது மாணவர் நலத்திற்கும் மராத்தி மொழியின் உரிமைக்கும், வளர்ச்சிக்கும் கேடு பயக்கும்,' என்று பூனா பல்கலைக் கழகத்தின் நிர்வாகக் குழு அறிவித்துள்ளது.

இக்கூட்டம் பம்பாய் அரசினரின் பயிற்சி மொழிக் கொள்கை டை ஆராயவே கூடியதாகும்

மேலும், முன்னர், அப்பல்கலைக் கழகத்தால் நியமிக்கப்பட்ட சிறப்புக் குழு செய்த முடிவையே மறுமுறையும் இக்குழு வலியுறுத்தியுள்ளது.

"தாய்மொழி ஒன்றே-பல்கலைக் கழகப் பயிற்சி பெறும் பல நிலை மாணவர்க்கும் பயிற்றுவிக்கும் மொழியாக இருத்தற்குரிய மிகுந்த இயற்கையும் தகுதியும் உடையது" என்பதே சிறப்புக் குழு தீர்மானித்த முடிவாகும்.

விருதுநகரில் கடையடைப்பு

விருதுநகர், ஏப். 4—

தங்கம் வெள்ளி வியாபாரச் சங்க அறிக்கைக் கிணங்க இவ்வூரில் 3 தினங்கள் தங்கம், வெள்ளிக் கடைகள் கடையடைப்பு அமைதியாக நடைபெற்றது.

இந்தியாவில் கப்பி போட்ட பாதைகள் (தேசியப் பாதைகள் உட்பட), சுமார் 90,000 மைலும், கப்பி போடப்படாத பாதைகள் சுமார் 1,75,000 மைலும் உள்ளன.

26 கிராமங்களின் விடுதலை முழக்கம்

புதுச்சேரி, ஏப். 3—

இங்கிருந்து 10 மைல் தூரத்திலுள்ள பகவூர் நகர சபையைச் சேர்ந்த 7 கிராமங்கள் பிரெஞ்சு ஆட்சியினின்றும் விலகி தாங்களாகவே சுய ஆட்சி புரிவதாக

திராவிட முன்னேற்றக் கழக . . . அக்கால தோழர் இரா. செ . . . செழியன், எம். ஏ., அ . . . லால், அழகிரி 'அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, . . . நாராயண செட்டித் தெ . . . இராயபுரம்) வெளியிடப்பெ . . . றது. ஆசிரியர்: இ . . . அண்ணாதுரை, வெ . . .